

இராணிப்பேட்டை மாவட்டம் காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம் ஓச்சேரி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறையின் சார்பில் நடைபெற்ற நலன் காக்கும் ஸ்டாலின் சிறப்பு முகாமினை பார்வையிட்டு 5 பயனாளிகளுக்கு மருந்து பெட்டகங்களை கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் ஆர்.காந்தி வழங்கினார். உடன் ஒன்றிய குழு தலைவர்கள் பி.வடிவேலு, அனிதா, ஒன்றிய செயலாளர் ஓச்சேரி எம்.பாலாஜி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையை ஏற்று தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் எஸ்.டி.பி.ஐ. கட்சியைச் சேர்ந்த 150 பேர் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி முன்னிலையில் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர். தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் அனைவரையும் வரவேற்றார்.உடன் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளர் சூர்யா வெற்றி கொண்டான்,கழக நிர்வாகிகள் கென்னடி,கனிமொழி, ஷெரிப்,முத்துப்பாண்டி,ஷேக் தாவுது, ஆறுமுக சாமி,சேசுராஜன்,சாமிதுரை, அப்துல்காதர்,சீனித்துரை,அன்பழகன் அழகு சுந்தரம்,ரமேஷ்,சேக்முகமது, திவான் ஒலி,சுரேஷ்,மணிகண்டன், வெங்கடேசன்,அப்பாஸ்,பீரப்பா,மூப்பன் ஹபீபுர் ரகுமான் உட்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.

### என்.டி.ஏ.வின் நடவடிக்கை நியாயமற்றது! பி.எட் மாணவர்களுக்கு

# தமிழ்நாட்டிற்குள்ளேயே தேர்வு மையங்களை மறு ஒதுக்கீடு செய்திடுக!

## ஒன்றிய கல்வி அமைச்சருக்கு - மூத்த வழக்கறிஞர் பி. வில்சன் எம்.பி. கடிதம்!

புதுடெல்லி, டிச.8-

மாநிலங்களவை உறுப்பினர்பி.வில்சன் ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்தர பிரதானுக்கு எழுதிய கடிதத்தின் முக்கிய குறிப்புகள் வருமாறு:-

தமிழ்நாட்டைச் சேர்ந்த பி.எட். மாணவர்கள் 2025 ஆம் ஆண்டிற்கான ஜுலை மாத SWAYAM செமஸ்டர் தேர்வுகளை டிசம்பர் 15 மற்றும் 16 ஆம் தேதிகளில் எழுதவிருக்கிறார்கள்.



ஆனால் தமிழகத்தைச் சேர்ந்த மிகப்பெரிய எண்ணிக்கையிலான மாணவர்கள், தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் உட்பட - பலரும் தாங்கள் தமிழ்நாட்டிற்குள்ளேயே தேர்வு மையத்தைத் தேர்ந்தெடுத்திருந்த போதிலும், கர்நாடகா மற்றும் கேரளா மாநிலங்களில் உள்ள மைசூர், மங்களூர், பெங்களூர் போன்ற இடங்களில் தேர்வு மையங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

தேர்வை நடத்தும் தேசிய தேர்வு முகமை (NTA)யின் இந்த நடவடிக்கை நியாயமற்றது மற்றும் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி நலனுக்கு தீவிரமாக கேடு விளைவிப்பதாகும்.

ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களின் எண்ணிக்கையில் நாட்டிலேயே முன்னோடியாக விளங்கும் தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கான பி.எட். மாணவர்கள் SWAYAM தேர்வு மூலமே தங்களது பல்கலைக்கழகப் பாடத்திட்ட முடிவுச் சான்றிதழைப் பெற வேண்டிய நிலை உள்ளது.

இந்நிலையில், மாணவர்களை பல நூறு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள வேறு மாநிலங்களுக்கு பயணிக்க வைப்பது - குறிப்பாக கிராமப்புறத்தைச் சேர்ந்த, பொருளாதார ரீதியாக பின் தங்கிய மாணவர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.

பயணச் செலவு, தங்குமிடச் செலவு ஆகியவற்றை ஏற்க இயலாத அளவுக்கு பெரும் சுமையை மாணவர்களுக்கு ஏற்படுத்தி உள்ளது.

தேர்வுக்கு பத்து நாட்களுக்கும் குறைவாக மட்டுமே உள்ள நிலையில், இந்த வகை ஒதுக்கீடுகள் மாணவர்களின் மனஅழுத்தத்தையும், அவர்களின் தயாரிப்பையும் கடுமையாக பாதிக்கின்றன.

இந்த அநீதியை உடனடியாக சரிசெய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் இது எதேச்சையாக நடந்த நிகழ்வாக தெரியவில்லை, NTA நடத்த கூடிய NEET, NEETPG உள்ளிட்ட பல தேசிய அளவிலான நுழைவுத் தேர்வுகளிலும், ஆட்சேர்ப்புத் தேர்வுகளிலும் இதே போன்ற பிரச்சனைகள் மீண்டும் மீண்டும் நிகழ்ந்து, பரவலான விமர்சனங்களை யும், நாடாளுமன்றத்தில் கேள்விகளையும் எழுப்பியுள்ளன.

இவை தொடர்ந்து நிகழ்வது வெறும் கவனக்குறைவு அல்ல, மாறாக NTAயின் அமைப்பு ரீதியான தோல்வியையே காட்டுகிறது;

நியாயமான தேர்வு முறையை உறுதி செய்ய அது தவறிவிட்டது என்றே தோன்றுகிறது.

தமிழ்நாட்டுக்குள் போதிய அளவு தேர்வு மையங்கள் இருந்தும், மாணவர்களை அண்டை மாநிலங்களுக்கு தள்ளுவது தவிர்க்க முடியாத கஷ்டத்தை ஏற்படுத்துவதோடு, அவர்களின் கல்வி எதிர்காலத்தையே ஆபத்தில் தள்ளுகிறது.

இது தேர்வுகளின் வெளிப்படைத் தன்மை, சம வாய்ப்பு, மாநில நலன்கள் உரிமைகளையே கேள்விக்குள்ளாக்குகிறது.

எனவே, தேர்வு தேதி நெருங்கிவரும் சூழலில், பாதிக்கப்பட்ட அனைத்து தமிழ்நாட்டு மாணவர்களுக்கும் உடனடியாக தேர்வு மையங்களை மாற்றி தமிழ்நாட்டிற்குள்ளேயே மறு ஒதுக்கீடு செய்யுமாறும், குறிப்பாக மாணவர்கள் முதலில் தேர்ந்தெடுத்த இடங்களுக்கு முன்னுரிமை அளித்து - தேர்வு மையங்களை ஒதுக்கீடு செய்யுமாறும் NTAக்கு உடனடி உத்தரவு பிறப்பிக்கும்படி உங்களை அவசரமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அநீதியை உடனடியாக சரிசெய்யத் தவறினால், தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மாணவர்களின் ஆசிரியர் கனவு பறிபோகும் அவல நிலை ஏற்படும்.

மேலும், தேசியத் தேர்வுகள் இனிமேலாவது எந்த ஒரு மாநிலத்தையும் பாதிக்காத வகையில் நடைபெறவும், வெளிப்படைத்தன்மை, அணுகல்தன்மை, நேர்மை ஆகியவை நமது நாட்டின் கல்விக் கொள்கையின் அடிப்படைக் கொள்கைகளாகத் தொடர்ந்து இருக்கவும் உங்களது உடனடி நடவடிக்கையை எதிர்பார்க்கிறேன்.

இவ்வாறு அவர் கடிதத்தில் கூறியுள்ளார்.

# விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழக க் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

செஞ்சி, டிச.8-

விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு. க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மாவட்ட செயலாளர்கள்கலந்து கொள்ளும் ஆலோசனை கூட்டம் இன்று காலை 10 மணிக்கு காணொளி வாயிலாக நடைபெறுகிறது. இதையடுத்து விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் காணொளி வாயிலாக செயற்குழு ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் ப. சேகர் தலைமையில் இன்று 8. 12 .2025 திங்கட்கிழமை காலை 10.00மணி அளவில் செஞ்சி திருவண்ணாமலை சாலையில் உள்ள தமிழ் திருமகள் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.



கூட்டத்தில் மாநில, மாவட்ட, நிர்வாகிகள் தலைமை செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள் ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், தேர்தல் பணி குழு நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் ஆலோசனை கூட்டத்தில் தவறாமல் கலந்து கொண்டுசிறப்பிக்குமாறு விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**பொருள்:** 1.என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி, 2.திருவண்ணாமலையில் நடைபெறும் இளைஞரணி மாநாடு சம்பந்தமாக, 3.கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# மக்களவையில் மூன்று தனிநபர் மசோதாக்கள்!

## தமிழச்சி தங்கபாண்டியன் அறிமுகம் செய்தார்!

புதுடெல்லி, டிச. 8-

நாட்டு மக்கள் நலனை முன்னிலைப்படுத்தும் வகையில், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், நடைபெற்று வரும் மக்களவையில், தனிநபர் மசோதாக்கள் மீதான விவாத்த்தில் கலந்துகொண்டு, மூன்று முக்கிய தனிநபர் மசோதாக்களை அறிமுகம் செய்து குறிப்பிடத்தக்க கவனத்தை ஈர்த்தார்.



1. மார்பகப் புற்றுநோய் (விழிப்புணர்வு) மசோதா - 2024

பெண்கள் ஆரோக்கியத்தை பாதுகாக்கும் நோக்கில், இந்தியாவில் அதிகரித்து வரும் மார்பகப் புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சைக்கு வழிவகுக்கும் வகையில் இந்த மசோதா கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த மசோதா மூலம் பொதுமக்களிடையே தொடர்ந்து விழிப்புணர்வு முகாம்கள், இலவச பரிசோதனை முகாம்கள், மற்றும் அரசு-தனியார் இணைந்து செயல்படும் திட்டங்கள் முன்மொழியப்படுகின்றன.

2. டிஜிட்டல் தனிநபர் தரவு பாதுகாப்பு (திருத்தம்) மசோதா - 2024

நாட்டில் வேகமாக வளர்ந்து வரும் டிஜிட்டல் சூழலில், குடிமக்களின் தனிநபர் தகவல்களை பாதுகாப்பது மிகப்பெரிய சவாலாக மாறியுள்ளது. அதனை கருத்தில் கொண்டு, உள்ள சட்டத்தில் உள்ள குறைகளை நீக்கி, தகவல் பாதுகாப்பை வலுப்படுத்தும் நோக்கில் இந்த திருத்த மசோதா முன்வைக்கப்பட்டது. டிஜிட்டல் தரவு பயன்பாடு, சேமிப்பு, மூன்றாம் தரப்புக் கையாண்டல் ஆகியவற்றுக்கு தெளிவான வழிகாட்டுதல்களை நிலை நிறுத்துவதே இந்த மசோதாவின் அடிப்படை நோக்கமாகும்.

3. வீட்டு உதவியாளர்கள் (வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நிலைகளை ஒழுங்குபடுத்துதல்) மசோதா - 2024 நாட்டின் பெரும் எண்ணிக்கையான வீட்டு உதவியாளர்களுக்கு சட்டரீதியான பாதுகாப்பு கிடைக்காத நிலையை மாற்றும் வகையில் இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சரியான ஊதியம், வேலை நேரம், பாதுகாப்பு, நலத் திட்டங்கள், மற்றும் பலாத்காரத்திலிருந்து பாதுகாப்பு உள்ளிட்ட உரிமைகளை சட்டப்பூர்வமாக வழங்கும் முயற்சியாக இது அமைகிறது.

மக்களவையில் இந்த மசோதாக்களை அறிமுகப்படுத்திய தமிழச்சி தங்கபாண்டியன், “பெண்கள் ஆரோக்கியம், குடி மக்களின் தரவு பாதுகாப்பு, மற்றும் வீட்டு உதவியாளர்களின் அடிப்படை உரிமைகள் - இவை அனைத்தும் இன்றைய சமூகத்தில் அத்தியாவசியமானவை. மக்களுக்காக, சமூக நலனுக்காக இந்த மசோதாக்களை கொண்டு வந்துள்ளேன்,” என தெரிவித்தார்.

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்!

# கரூரில் மாரத்தான் விளையாட்டுப் போட்டி!

## செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

கரூர், டிச.8-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, கரூர் திருவள்ளூர் விளையாட்டு மைதானத்தில் ஆண், பெண்களுக்கான மாரத்தான் விளையாட்டுப் போட்டிகளை மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து பரிசுகளை வழங்கினார்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்த நாளை முன்னிட்டு, கரூர் மாவட்ட கழகத்தின் சார்பாக, மொத்த பரிசுத்தொகை ரூ 2,68,000/ மற்றும் கோப்பைகளுக்கான, மாவட்ட அளவிலான இருபாலருக்குமான மாரத்தான் போட்டிகளை கரூர் திருவள்ளுவர் மைதானத்தில் மாவட்டக் கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்.

மாவட்ட அளவில் நடைபெற்ற மராத்தான் போட்டியில் ஆண்கள் பிரிவில் 1,300 பேரும், மகளிர் பிரிவில் 480 பேரும் கலந்து கொண்டனர். 15 கிலோமீட்டர் ஆண்களுக்கான மராத்தான் போட்டியில் முதல் பரிசாக ரூ 50,000 மற்றும் கோப்பை, பரிசாக ரூ 40,000, 3 வது பரிசாக ரூ 30,000 வழங்கப்பட்டது. பங்கு பெற்ற அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இதேபோல, பெண்களுக்கான 10 கிலோமீட்டர் மராத்தான் போட்டியில் முதல் பரிசாக ரூ 50 ஆயிரம் + கோப்பை இரண்டாம் பரிசாக ரூ 40 ஆயிரமும், மூன்றாம் பரிசாக 30 ஆயிரம் மற்றும் கோப்பைகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர். இளங்கோ, க. சிவகாம சுந்தரி, மாநகர திமுக செயலாளர் எஸ்பி.கனகராஜ், மாவட்டத் துணைச் செயலாளர் பூவை ரமேஷ் பாபு, வழக்கறிஞர் விஜயகுமார், துணை மேயர் தாரணி சரவணன், பகுதி கழகச் செயலாளர்கள் ஆர்.எஸ். ராஜா, ஜோதிபாசு, விஜிஎஸ் குமார், வெங்கமேடு பாண்டியன், க.சுப்பிரமணியன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சக்திவேல் , காலனி செந்தில், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் விக்ரம், முன்னிலை வகித்தனர். மாமன்ற உறுப்பினர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக அனைத்து நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ஆண்கள் மாரத்தான் போட்டியில் மணிகண்டன், ரங்கராஜ், அஜித், ஆகியோர் வெற்றி பெற்றனர். இவர்களுக்கும், ஆறுதல்பரிசுகள் கோகுல், தமிழ்ச்செல்வன், பாலமுருகன், சம்பத், யுக்னேஷ், பிரகாஷ், ரிஷிகேஷ் உள்ளிட்டோருக்கு பரிசுகளை மாவட்ட கழக செயலாளர் வி செந்தில் பாலாஜி வழங்கினார்.





தேனி வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. வழிகாட்டின்படி பெரியகுளம் தொகுதி ஒன்றிய இலக்கிய அணி அமைப்பாளர் சருத்துப்பட்டி கணேசன் ஏற்பாட்டில் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தனியார் மண்டபத்தில் தூய்மை பணியாளர்களுக்கு பொதுமக்களுக்கு மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிவழங்கப்பட்டது இந்த நிகழ்ச்சியில் சரவணகுமார் எம்.எல்.ஏ. மாவட்ட அவை தலைவர் பி.டி.செல்லப்பாண்டி பெரியகுளம் தொகுதி பார்வையாளர் முன்னாள் எம்.எல்.ஏ. முத்துராமலிங்கம் மற்றும் ஒன்றிய செயலாளர்கள் நகர செயலாளர்கள் பேரூர் செயலாளர்கள் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் தெற்கு ஒன்றிய துணை செயலாளர் ஆர்.கோதண்டபாணி ஏற்பாட்டின் பேரில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு நாட்டரசன் கோட்டை கண்ணனுடைய நாயகி அம்மன் கோவிலில் சிறப்பு அன்னதானம் பேரும் கழக செயலாளர் ஜெயராமன் தலைமையில் நடைபெற்றது. ஒன்றிய துணை செயலாளர் ஆர்.கோதண்டபணி உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு கூட்டத்தில் மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. பேசினார். இதில் மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினர் அமலுவிஜயன் மாவட்ட துணை செயலாளர்கள் மலர்விழி லோகநாதன், முனைவர் எம்.பிரபாத்குமார் மற்றும் ஒன்றிய, நகர அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.